REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 12உ திங்கள் (27—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 13உ செவ்வாய் (28—12—54) [இதழ் 168

## "தடையை மீறுவோம்!"— இராதா குழுவினர் அறிக்கை

தோழர் எம். ஆர். இராதா அவர்களை சிறை வைத்திருப்பது உரிமைகளுக்குப் புறம்பானது என்றும், உடனே அவரை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரி, எம். ஆர். இராதா நாடகக் குழுவினர் 97 பேர் கையெழுத்திட்டு சென்னை முதல் அமைச்சர் காமராசருக்கு மகஜர் ஒன்று அனுப்பியிருக்கிறார்கள்.

"தோழர் இராதா அவர்களை உடனே விடுதலை செய்யாவிடில் நாங்களும் சிறை செல்லத் தயார்" என்றும், விரைவில் திருச்சியில் 'இராமாயணம்' நாடகம் நடத்தப்படும் என்றும் அவர்கள் அந்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

# உண்மை உழைப்பாளிகளின் உள்ளத்தை நேரு புண்படுத்திவிட்டார்

## புதுச்சேரியில் எல்லாக் கட்சிகளும் நேர்மை தவறியவை என்பது சரியல்ல!

## பொதுப்படையாகச் சொல்வது விடுதலை வீரர்களுக்கு இழுக்கு!

## பண்டிதரின் பதட்டப் பேச்சுக்கு புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் வருத்தமும் கண்டனமும்

"'புதுச்சேரியில் உள்ள அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் எவையும், பல பிரச்சினைகளில், குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டவை எவையுமே இல்லை' என்று பண்டித நேரு கூறியிருப்பது வருந்தத் தக்கது,"

என்று, புதுச்சேரி தேசியக் காங்கிரசின் தலைவரான செல்லனே நாயகர் கூறியுள்ளார்.

இத்திங்கள் 21-ம் நாள், டில்லி மேல்சபையில் பேசிய பண்டித நேரு, புதுச்சேரியில் உள்ள அரசியல் நிலைமை பற்றிக் குறிப்பிடுகையில், 'புதுச்சேரியில் உள்ள கட்சிகள் அனைத்தும் குற்றச்சாட்டிற்கு அப்பாற்பட்டவை அல்ல'வென்று கூறினார். அதுவும், பல பிரச்சினைகளில் அக்கட்சிகள் தவறு புரிந்திருப்பதாக அவர் கூறினார்.

இப்படி பண்டித நேரு பொதுப்படையாக புதுச்சேரியில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தையும் நாவடக்கம் இன்றி தாக்கியிருப்பது சரியல்ல என்று கூறும் முறையில் தோழர் செல்லனே நாயக்கர் தனது வருத்தத்தை தெரிவித்திருக்கிறார் எனலாம்.

இப்படி பண்டித நேரு பொதுப்படையாக கண்டித்திருப்பது வருந்தத்தக்கது என்று செல்லனே நாயக்கர் கூறியதுடன், புதுச்சேரியில் உள்ள தேசிய காங்கிரசின் உறுப்பினர்கள் தூய்மையான நடத்தையுடையவர்கள் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

"நல்ல உள்ளத்துடன் பணி செய்த தேசீய காங்கிரசுக்கு நேருவின் சொற்கள் இழுக்கை விளைவிப்பதாகும்," என்று செல்லனே நாயக்கர் மேலும் கூறினார்.

"தேசீயப் பிரச்சினைக்காக ஏராளமான தொல்லைகளை ஏற்று நேர்மையாக உழைத்தவர்களின் மனதை பண்டித நேருவின் சொற்கள் புண்படுத்தும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டாராம்.

[புதுச்சேரியில் உள்ள தி. மு. கழகத்தவர்கள் புதுவை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கண்ணியத்துடன் போராடினர் என்பதும், இழி செயல்களில் இறங்காது விடுதலைப் போரில் தங்கள் பங்கைச் செலுத்தினர் என்பதையும் பொதுமக்கள் அறிவார்கள்.]

## தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை சிறையில் எம். ஆர். இராதாவைச் சந்தித்தார்

திருச்சி, டிச. 24—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், இன்று காலை 11 மணிக்கு, திருச்சி மத்திய சிறையில் காவலில் வைக்கப் பட்டிருக்கும் தோழர் எம். ஆர். இராதாவைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது பொதுச் செயலாளருடன் தோழர்கள் கே. ஏ. மதியழகன், ஜி. பராங்குசம், எஸ். வி. லிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

சிறையில் தோழர் இராதா அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்.

—ந. நி.

## பழங்குடி மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

## 6 பேர் மரணம்; 20 பேர் காயம்

### 2000 பேர் கூடி மிராசுதார் வீட்டைத் தாக்கினார்களாம்

சூரத், டிச. 26—

இங்கிருந்து 40 மைல் தொலைவில் உள்ள வாலட் என்னும் இடத்தில் ஆதிவாசிகள் எனப்படும் மக்கள் கூட்டம் ஒன்று நிலப்பிரபு ஒருவரின் வீட்டைத் தாக்கினார்களாம்.

பூபேந்திர தேசாய் என்பவரின் வீட்டை 2000-க்கு மேற்பட்டவர்கள் தாக்கினார்களென்றும், கற்களை வீசி ஜன்னல்கள், கதவு முதலியவற்றை உடைத்தார்களென்றும் கூறப்படுகிறது.

விவசாயப் பிரச்சினை சம்பந்தமாக இக்கலவரம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

தாக்கப்பட்ட வீட்டுக்காரர்களுக்கு உதவ வந்த கிராம மக்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கினார்களாம்.

கம்பு, கத்தி, கற்கள் இவைகளினால் கிராம மக்கள் தாக்கப்பட்டதில் 15 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

ஸ்தல போலீசார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று முதலில் கலகக்காரர்களைப் பயமுறுத்த ஆகாயத்தில் சுட்டதாகவும், அது பயனற்றுப் போகவே கலகக்காரர்கள் மீது சுட்டதாகவும் தெரிகிறது.

போலீசார் சுட்டதில் 6 பேர் மரணமடைந்தார்கள் என்றும், 5 பேர் காயமுற்றனர் என்றும் கூறப்படுகிறது.

15 நாட்களுக்கு இப்பிரதேசத்தில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தில் பலமாகக் காயமுற்ற இருவர், மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனராம்.

சூரத் கலெக்டர் சம்பவம் நடைபெற்ற கிராமத்தில் முகாம் போட்டிருக்கிறார்.

சூரத்திலிருந்து விசேஷ போலீஸ் படை அனுப்பப்பட்டிருக்கிறது.

தேசாய்க்கும், சில கிசான்களுக்கும் இடையே விவசாய உரிமை பற்றிய சச்சரவே இந்த நிகழ்ச்சிக்கு அடிப்படை என்று சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் பற்றிய அதிகாரபூர்வமான செய்திகள் வெளியாகவில்லை.

துப்பாக்கிப் பிரயோகத்தில் 7 பேர் மரணமடைந்தனர் என்று அதிகாரபூர்வ மற்ற செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## போலீசார் மீது கிராம - மக்களின் தாக்குதல்

## மரத்தில் கட்டி வைத்து பனிக் காற்றில் வதைத்தார்களாம்

காட்மண்டு, டிச. 26—

சர்க்காருக்கு எதிரான கருத்துடைய கிராமவாசிகள், கூர்க்கப் பரீட்சித்தின் தூண்டுதலினால், போலீசார் குழு ஒன்றைத் தாக்கி, அவர்களை இரவு பூராவும் ஒரு இடத்தில் காவலில் வைத்துவிட்டார்களாம்.

லைசென்சு இல்லாமல் வைத்திருக்கும் ஆயுதங்களைத் தேடி போலீசார் சென்றனர். இரண்டு போலீசாருக்குப் பலத்த கத்திக் குத்து காயங்கள் ஏற்பட்டனவாம்.

இந்தத் தாக்குதலைத் தூண்டியவர்கள் கூர்க்கப் பரீட்சித்தினர் என்று இன்ஸ்பெக்டர்-ஜெனரல் கூறினார்.

போலீசார் நன்றாக அடிக்கப்பட்டு, குத்தப்பட்டு, பின்னர் மரங்களில் கட்டிவைக்கப்பட்டார்களாம்.

"இரவு பூராவும் மரத்தில் கட்டப்பட்ட போலீசார் பனிக் காற்றில் சிக்கி தவித்தார்கள்," என்று அவர் மேலும் கூறினார்.

போலீசாரை எதிர்க்க 800 கிராமவாசிகளைத் திரட்டினார்கள் என்று தெரிகிறது.

தாக்குதலுக்கு உள்ளான போலீசாரில் இரண்டு பேர் தப்பித்துப் போய் செய்தி சொல்லியதும், மீட்புப் படை அனுப்பப்பட்டதாம்.

## சாதுக்கள் மீது கொலை வழக்கு

## போலீசாரை எதிர்த்து கலகம் செய்ததின் எதிரொலி

கட்டாக், டிச. 24—

கடந்த ஜூலை 18-ந் தேதியன்று 'கலியபோதா' மடத்தில் சாதுக்கள் பலர், போலீசார் மடத்தைச் சோதனை போடுவதைத் தடுக்க முயன்று போலீசாரைத் தாக்கியதின் விளைவாக ஒரு போலீசார் கொல்லப்பட்டதும் பலர் படுகாயப்பட்டதும் பற்றிச் செய்திகள் வந்தன அல்லவா?

இப்போது அந்த மடத்தைச் சேர்ந்த சாமியார்கள் 14 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர்களில் பகல பாபா என்பவரும் ஒரு சாது ஆவார் என்று தெரியவருகிறது.

அந்த 14 பேர் மீதும் இ. பி. கோ. (கொலை), 302, 131 ஆகிய பிரிவுகளின்படி (149-ம்பிரிவுடன்) என்று வழக்குத் தொடரப்பட்டுள்ளதாம்.

வரும் ஜனவரி 8-ந் தேதியன்று செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பி கீழ் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மடத்தில் வசிக்கும் சாதுக்கள் நால்வர் ஒரு குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தமைக்காக அவர்களைப் போலீசார் கைது செய்யச் சென்றபோது, ஆயுத சகிதமாக மடத்துச் சாதுக்கள் போலீசாருடன் எதிர்த்து மோதியதும் அதன் விளைவாக ஒரு போலீஸ்காரர், இரு சாதுக்கள் ஆக மூவர் கொல்லப்பட்டனரென்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

### தடைகளை நீக்குகின்றனர்

எல்லை காந்தி அப்துல் கபார் கான் மீதுள்ள எல்லா தடைகளும் சீக்கிரமே ரத்து செய்யப்படும் என்று பாக். பிரதமர் முகமது அலி கூறியதாகத் தெரிகிறது.

## தேர்தலில் தோற்றதின் விளைவு?

## கல்லூரி மாணவர்கள் கலவரம்

ஜபல்பூர், டிச. 26—

இங்கு உள்ள பெர்ட்சன் கல்லூரி ஆண்டு விழாவின்போது மாணவர்கள் பலர் கலவரம் செய்தனர்; விழாவிற்காக அமைக்கப்பட்டிருந்த மின்சார அமைப்புகளைப் பாழ் படுத்தினர்; வந்திருந்த விருந்தாளிகள் மீது குண்டூசிகளை மழை போல் கொட்டினர்; இரசாயனத் திராவகங்களை விருந்தினர் மீது ஊற்றினர் என்றுசெய்திகள் கூறுகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## 5,000 ஓட்டல் தொழிலாளர்கள் பரிதாப நிலை?

## 18-மணி நேரம் உழைப்பு; வீதியோரத்தில் குடியிருப்பு!

சூரத், டிச. 26—

சூரத் நகரில் உள்ள உணவு விடுதிகளில் வேலை செய்யும் 5,000 தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் தெரு ஓரங்களில் குடியிருக்கிறார்களாம். நாளொன்றுக்கு 16 முதல் 18 மணி நேரம் வேலை செய்யும் இத்தொழிலாளர்கள் மிகவும் கீழ்த்தரமான வாழ்க்கை நடத்துகிறார்களாம்.

இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் தினக் கூலி கொடுக்கப்படுகிறதாம்; ஏழு ஆண்டுகள் வேலைசெய்தும், தினக்கூலியே கொடுக்கப்படுகிறதாம். பம்பாய் கடைச் சிப்பந்திகள் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளவே முதலாளிகள் இவ்வாறு செய்கிறார்களாம்.

இத்தொழிலாளர்களுக்கு விடுமுறை, பிராவிடண்ட் நிதி ஆகியவை கொடுக்கப்படவேண்டுமென்று கோரி, குறைந்த கூலி நிர்ணயக் குழுவிற்கு இத்தொழிலாளர் சங்கம் மகஜர் ஒன்று சமர்ப்பித்து இருக்கிறதாம்.

சூரத்தில் ஏராளமான லாபம் பெறக்கூடிய உணவு கடைகள் 800-க்கு மேல் இருக்கின்றனவாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 27—12—1954 திங்கள்

# போராட்டந்தான் முடிவு!

பார்ப்பனக் குடிமக்களுக்குத் தமிழ், வெறும் பிழைப்பு மொழியே அல்லாது தாய் மொழியாகாது என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும். இவ்வுண்மைக்கு மாருக அக்குடிப் பிறந்த ஒருவர் இருவர் தமிழ் மொழியின்பால் பற்றும், தமிழ் வளர்ச்சியில் உண்மையான கவலையும்கொண்டு, தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிருர்கள் என்பதை நாமும் அறிவோம். அதே போன்று, இன்றும், தமிழ், ஆக்கம் பெறும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் நாம் மறக்கத் தயாராக இல்லை. அவர்கள் மொழித் தொண்டினைஒப்பவும், அத்தொண்டிற்காக அவர்களைப் பாராட்டவும் நாம் என்றும் பின்வாங்க மாட்டோம். தூய செயல் எங்கிருந்தாலும், அச்செயலை மேற்கொண்டு ஒழுகுபவர் எக்குடி பிறந்தவர்களாகயிருந்தாலும், அவர்கள் செயலிலுள்ள பொதுமைக்காக, அவர்களை வரவேற்று ஊக்கமூட்டுவதே மனிதப் பண்பு எனும் விருத்தப் போக்கு, நமக்கு உடன்பாடு உடையதேயாகும்.

ஆங்கில மொழியில், அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்களைக்காட்டிலும், எல்லாத் துறைகளிலும் புலமை மிக்குடைய பெரும் எழுத்தாளர்களும் — நாவலர்களும், பார்ப்பனக் குடிமக்களிலும் இருக்கிருர்கள்—திராவிட மரபிலும் இருக்கிருர்கள். ஆங்கிலேயர்களைக்காட்டிலும், ஆங்கில மொழிப் பயிற்சியில், அவர்களுக்கு அளவு கடந்த ஆற்றல் இருக்கிறது என்ற காரணத்திற்காக, அவர்களைக் கலப்பற்ற ஆங்கிலேயர்களாக ஒப்புக்கொள்ள ஒருவரும் முன் வருதல் அறவே கிடையாது. அவர்களில் சிலருக்கு, ஆங்கில மொழியில் உண்மையான பற்றுதலும், அதன் வளர்ச்சியில் உண்மையான அவாவும் கொண்டு இருக்கின்றன. அதற்காக, அவர்களை ஆங்கிலேயர்கள் என அறிவிலியும் கூறத் துணியான்.

ஐரோப்பிய மொழி வழி வந்த சிலர், தமிழ் மொழிக்கு அதுவரை தமிழர்கள் செய்யாத அளவில், நிலையான தொண்டு செய்துள்ளனர். அதற்காக, அவர்களைப் பாராட்டுகின்றவர் உள்ளனரே ஒழிய, அவர்களை நம் தமிழர்கள் எனக் கொள்ளுகின்றவர் இலர்.

மேக்ஸ் முல்லரின் வடமொழி பாண்டியத்திற்காக அவரை வடமொழிவழிவந்தவர் எனக் கூறினவரும் இல்லை; ஆரிய ரிஷிகள் பட்டியலில், முல்லர், ரிஷியென எழுதி வைத்துக்கொண்டவர்களும் இல்லை. நிற்க,

ஒரு மொழி, அம்மொழி வழி வந்த மக்களின் வாழ்க்கை வழியை, பளிங்கு போல் விளக்கிக் காட்டும் ஒரு ஒப்பற்ற கருவூலம் என்பதை மறுப்பார் ஒருவரும் இங்கு இலர். குறிப்பிட்ட ஒரு மொழி வழங்கும் நாட்டில், அம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்பவர்களிடந்தான், அரசியல், பொருளியல், மத இயல், சமூக இயல் ஆகிய துறைகளின் பிடி இருக்க வேண்டுவது கட்டாயமாகும். இது உலகப் பொது விதியாகும். இதில் எந்த ஒரு துறையாவது, தமிழ் மொழி வழிவந்தவர் ஆணைக்குக் கட்டுப்பட்டதாக இருக்கிறதா என ஆராய்ந்தால், இல்லை என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியதாக இருக்கிறது.

அரசியல், பிறநாட்டினர் பிடியிலும்; பொருளியல், வெளியார் ஆணையிலும்; இருந்து வருவது போன்றே, மொழி, மதம், சமூகம் போன்ற துறைகளும், மாற்று நோக்கினர் ஆதிக்கத்திலேயே சிக்குண்டு கிடக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இதே நிலைதான்; அவன் வெளியேறிய பிறகும் இருக்கும் நிலை அதுவேதான்.

குறிப்பிட்ட ஒரு மொழி வழங்கும் பகுதியில், அம்மொழி வந்தவர்கள் எவ்வ்படிதான், அப்பகுதிக்குரிய துறைகள் அனைத்தும் இயங்கியாக வேண்டும் என்பது உலகப் பொது விதி என்பதை நாம் மேலே எடுத்துக் காட்டியுள்ளோம். அப்பொது விதி, பிற துறைகளில் எவ்வாறுஇயங்குவதாக இருந்தபோதிலும், அவை பற்றி இப்பொழுது நாம் ஆராயப் போவதில்லை. ஆனல், மொழித் துறையில் மட்டும், அப்பொது விதி எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆராய்வதற்கு, இப்பொழுது நமக்கு அரிய வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கிறது. அத்தகு அரிய வாய்ப்பை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர், முதல் அமைச்சர் கனம் காமராசர் அவர்களே ஆவார்.

தமிழ் நாட்டில், தமிழுக்குத்தான், துறைகள் அனைத்திலும் முதலிடம் இருக்க வேண்டும். நடைமுறையோ அதற்கு மாருக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, தமிழ் இசை இயக்கத் தோற்றத்தையும், துவக்கத்தில் அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பையும், இறுதியில் ஏற்பட்ட வெற்றியையும் நாம் கருதிப் பார்க்க வேண்டும்.

தமிழ் வழங்கும் பகுதியில் தமிழில்தான் இசை வேண்டும் என்பதற்கு ஒரு பலம் பொருந்திய இயக்கம் எழவேண்டி இருந்தது என்பது, எதைக் காட்டுகிறது? தமிழ் மொழியின் பிடி, அம்மொழிவழி வந்தவர்களிடம் இல்லை என்ற உண்மையைத்தானே, தமிழ் இசை இயக்கத் தோற்றம் திட்டவட்டமாக வலியுறுத்துகிறது? இவ்வுண்மையிலிருந்து, நியாயமான வினு ஒன்றும் கிளம்புகிறது.

தமிழ் இசை, பொதுவாக எம்மொழியினர் ஆதிக்கத்தில் இருந்தது என்பதும், குறிப்பாக தமிழ் மொழி, எம்மொழியினர் பிடியில் சிக்கிக் கிடந்தது என்பதுமே அக்கேள்வியாகும். இக்கேள்விக்கேற்ற விடையை, முதலமைச்சர், மிகமிக நயமாக, ஆனல் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். சிறிது ஐயத்திற்கும், அவர் கருத்தில் இடம் இல்லை.

இசை, ஒரு அருமையான கலைத் துறையாகும். பொதுவாகக் கலைத் துறைகள், கற்றவர்களிடமே இருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதாகும். இதன்படி, இசைத் துறையும் கற்றவர்களுடைய கைப்பாவையாக இருந்துவந்தது. அவர்களோ, தமிழ் மொழி வழிவராதவர்கள். அதாவது தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாது, பிழைப்பு மொழியாகக் கொண்டு வாழ்பவர்கள். அவர்கள்தான் தமிழ் இசையை மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள் எனச் சுட்டிக் காட்டுகிறது, தமிழ் இசை இயக்க வரலாறு.

தமிழ் மொழியில் பற்றும் பாசமும் கொண்டு தமிழுக்கு அழியாத் தொண்டு செய்த பிற மொழியினரும் இருந்தனர்—இப்பொழுதும் செய்து வருகின்றனர் என்பது போன்றே, தமிழ் இசை இயக்கத்திற்கும் அத்தகையவர் இரண்டொருவர் துணை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதே யல்லாது, அதை, இயக்கத்தை எதிர்த்தவர்களைக் கணிப்பதற்குரிய ஒரு அளவுகோலாகக் கொள்ள முடியாது.

கலைத்துறைகள், பெரிதும், கற்றவர்களிடமே தோன்றி வளரும் இயல்புடையன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அத்துறைக்குக் கல்வி முக்கியம் என்பதுடன், போதிய ஓய்வும் முக்கியம் என்பதையும் கூட்டிக்கொள்ள வேண்டும்.

இசைக் கலையோ நளினக் கலையாகும். கல்வியும் ஓய்வும் ஒருங்கே பெற்றுள்ளவர்களிடம்தான், அது தோன்றி வளர்ந்து மலரும் என்பது வெளிப்படை.

இம்முடிவைக் கொண்டு பார்க்குமிடத்து, கல்வியும் ஓய்வும், தேவையான அளவு அப்பொழுதும் இப்பொழுதும் பெற்றிருப்பவர்கள்பார்ப்பனக் குடிமக்களே எனக்கொள்வது மிகையாகாது. இன்றுள்ள சமுதாய அமைப்பில் அவர்கள்தான் உச்சத்தில் இருக்கிருர்கள் என்பதும், அவர்களாலேயே மறுக்க முடியாத உண்மையாகும்.

அவர்கள் அனைவரும் ஒரு சமூகம் என்ற நிலையில் உடலுழைப்பை வெறுக்கிறவர்கள்—இழிவாகக் கருதுகிறவர்கள்—கருதுமாறு நூல் முறையால் கற்பிக்கப்பட்டு இருக்கிறவர்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. இந்த விரும்பத்தகாத நிலைக்கு, இப்பொழுது இருப்பவர்கள் நேரடியான பொறுப்புடையவர்கள் அல்லர் என்பதை நாமும் அறிந்தே இருக்கிருேம். அதற்கு வரலாற்றுக் காரணங்களும், சமுதாய உயர்வு-தாழ்வு அமைப்புகளுமே முக்கிய காரணம் என்பதும் நாம் அறியாததல்ல.

எனவே, நமது போராட்டமும், அவ்வேற்பாடுகளை ஒழித்துக் கட்டுவதே அல்லாது, அக்கோட்பாடுகளை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் தனி நபர்களை நிந்திப்பது அல்ல என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் உள்ள உயர்வு-தாழ்வு நீக்கப்பட்டு, நிலைமை சீராக, புதிய மக்களாட்சி மலர வேண்டுமானல், சமுதாயத்தின் உச்சியிலிருப்பவர்களும், தங்கள் இடத்தை விட்டுப் பெயர்ந்து, சமுதாயத்தின் காலடியில் கிடக்கும் மக்களை இரு கையேந்தி வரவேற்க முன்வர வேண்டும். அப்பொழுதுதான், மக்களாட்சி, அமைதியாக உருவாக இயலும். சமூகத்தின் உச்சியில் இருப்பவர்களுக்கு, அவ்வுச்சியில் இருப்பதால், அதிலிருந்து தாங்கள் பெற்றுவரும் இன்பத்தை, அதைப் பெறும் உரிமையுடையவர்களுடன் உறவுகலந்துத்துய்க்க மனமாற்றம் பிறக்கவில்லையானல், ஏமாந்து கிடப்பவர்களிடமிருந்து போராட்டந்தான் முடிவாகக் கிளம்பும் என்பது உலக வரலாறு.

இவ்வரலாற்று உண்மையை எடுத்துக் காட்டி, ஆதிக்கபுரியினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ள முதலமைச்சர் காமராசருக்கு நமது நன்றி உரித்தாகுக.

## தாழ்த்தப்பட்ட மக்கள் குடிதண்ணீர் பிரச்சினை

### மேலும் 1,000 கிணறுகள் தோண்டப்படும்

சென்னை, டிச. 24—

வருகிற மார்ச் திங்களுக்குள் சென்னை மாநிலத்தில் உள்ள சேரிகளில் 1,000 கிணறுகள் தோண்டப்படும் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் குடி தண்ணீர் பிரச்சினை இதன் மூலம் தீர்க்கப்படும் என்றும் சென்னை சர்க்கார் தாழ்த்தப்பட்ட இலாகா அமைச்சர் பரமேஸ்வரன் பத்திரிகை நிருபர்களிடையே கூறினர்.

இந்தப் பொருளாதார ஆண்டிற்குள் வேலைகள் முடிவடையுமாறு வேலைகள் துரிதப்படுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினர்.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 40,00,000 பூராவையும் செலவிடுமாறு செய்யப்படும் என்று சர்க்கார் எதிர்பார்ப்பதாக அவர் கூறினர்.

## ஆதரித்த காங்கிரசே ஆட்சியை விட்டு அகற்றுகிறது!

### ஏழாண்டுகளில் ம. சோ. கட்சி இந்தியாவின் ஆட்சியிலமருமாம்

### டாக்டர் ராம் மனேகர் லோகியாவின் கருத்து

"திரு—கொச்சியில் உள்ள பட்டம் ஆட்சி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கண்டித்து நான் குரல் எழுப்பியபோது வாய்மூடி மௌனிகளாயிருந்த அதே காங்கிரஸ்காரர்கள்தான் இப்போது அந்த மந்திரி சபையின் வீழ்ச்சிக்கும் காரணமாயிருக்கின்றனர்.

"திட்டக் குழுவில் அவர்களுக்கும் ஒரு இடம் தராததினலேயே, காங்கிரஸ்காரர்கள், ஆதரவை நிறுத்திவிடுவது என்ற முடிவை மேற்கொண்டது மிகவும் தாழ்ந்த மனப்பாங்காகும்,"

—என்று, திரு—கொச்சி மாநிலத்தில் உள்ள ம. சோ. கட்சி சர்க்காருக்கு, பிரதேச காங்கிரஸ் தந்துவந்த ஆதரவை நிறுத்திவிடுவதென செய்யப்பட்ட முடிவுக்கு வருத்தம் தெரிவித்துப் பேசுகையில், ம. சோ. கட்சித் தலைவர் டாக்டர் லோகியா குறிப்பிட்டுள்ளார்.

பீகார் மாநில இளைஞர் சோஷலிச முதல் மாநாட்டினை துவக்கி வைத்த டாக்டர் லோகியா மேலும் பேசுகையில், இந்தியாவின் ஆட்சி பீடத்தில் அமர, ம சோ. கட்சிக்கு இன்னும் 5 அல்லது 7 ஆண்டுகள் ஆகலாம் என்றும், இந்த இடைக்காலத்தில் இடைவிடாது உழைத்து ம சோ. கட்சிப் பாதையில் மக்களின் எண்ணங்களை உருவாக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிருர்.

## ஆண்களைவிட பெண்களே

### சுறுசுறுப்பாயிருக்கின்றனர்

"மணிப்பூர் ஆலோசனைக் குழு ஆட்சியில் அங்கத்தினரான கிருஷ்ணமோகன் சிங் என்பவரை கடந்த 17ந்தேதியன்று 'கடத்தி'ச் சென்றவர்கள் பள்ளி மாணவிகளின் கூட்டமா? அப்படியானல் அந்தப் பெண்களில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?"

என்று மக்கள் சபையில் திருமதி ஹாவ்மென் என்ற உறுப்பினர் கேள்வி ஒன்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த உள்நாட்டு அமைச்சர் டாக்டர் கட்ஜு கூறியதாவது :—

"அந்தச் சம்பவத்தில் பெண்கள் ஈடுபட்டனரா என்பது குறித்து எனக்குத் தகவல் ஏதும் இல்லை ; ஆனல், மணிப்பூரில் ஆண்களைவிட பெண்களே மிக சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கின்றனர் என்பது மட்டும் உண்மை"

## மக்கள் சபை உப-தேர்தல்

### 5,81,836 வாக்காளர்களில் 88,882 பேர்களே வாக்களித்தனர்

தியோகர், டிச. 23—

இந்திய மக்கள் சபைக்கு பூர்ணியா—சந்தல் தொகுதிக்கு (பர்கணக்கள் வாழும் தொகுதி) நடைபெற்ற உபதேர்தல் ஒன்றில் பெஞ்சமின் ஹன்ஸ்டா என்பவர் (ஜர்கந்த்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அந்தத் தொகுதியில் உள்ள மொத்தம் 5,81,336 வாக்காளர்களில் 83,882 பேர்கள் மட்டுமே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர் என்றும், தோழர் பெஞ்சமினுக்கு 69,880 வாக்குகளும், அவரை எதிர்த்து நின்ற டேவிட் முன்ஜ்மி என்ற சுயேச்சைக்கு 19,002 வாக்குகளும் கிடைத்தன என்று தெரிகிறது.

## கர்நாடக மாநிலம்

### அமைப்பது குறித்து மைசூர் சட்ட சபை விவாதிக்கும்

பெங்களூர், டிச. 24—

கர்நாடக மாநிலம் அமைக்கும் பிரச்னை குறித்து மைசூர் மாநில அரசாங்கம் நியமித்த சேஷாத்திரி குழுவின் அறிக்கையை வரும் பிப்ரவரி 19-ல் கூடும் மாநில சட்டசபை விவாதிக்குமென முதன் மந்திரி அனுமந்தையா கூறியிருக்கிருர்.

சபை அங்கத்தினர்களின் ஆலோசனைக்குப் பிறகு மாநில அரசாங்கம், கர்நாடக மாநிலம் காணுவது குறித்து திட்டங்கள் தீட்டி, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புமெனவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

# கழகச் செய்திகள்

## அதிகாரிபட்டியில் தி. மு. கழக அமைப்பு

5—12—54ல், தோழர் எம். பி. பாண்டியன் அவர்களால் தி. மு. கிளைக் கழகம் நிறுவப்பட்டது. தோழர் எஸ். அன்பரசன் தி. மு கழகக் கொள்கை, வரலாறு, செயல்கள், தேவை இவை பற்றி சொற்பொழிவாற்றினர். பின்னர் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர:— செயலாளர்: தி. ராமசாமி; துணைச் செயலாளர்: தி. செல்லமணி; பொருளாளர்: பூ. பொன்னையா; விளம்பர உறுப்பினர்: சு. பாலகிருட்டிணன்; துணை விளம்பர உறுப்பினர்: த. சீனிவாசகம்; மாவட்டப் பிரதிநிதி, அமைப்பாளர்: தி. ரத்தினம்.

## மகாதேவி (முசிறி வட்டம்) தி. மு. க. திறப்பு விழா

11—12—54 மாலை 7 மணிக்கு திரு. ரெங்கசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி கழகத் துவக்க விழாவில் தோழர் தி. க. கும்பையா கொடியேற்றிவைத்துப் பேசிய பின், திரு. மு. பெ முத்து கருப்பன் சொற்பொழிவாற்றினர். அன்று இரவு 10 மணிக்கு, திருச்சி திரு. ஐ. எம். ஷெரீப் தலைமையில் மூவேந்தர் நாடக மன்றத்தாரால் "பலிபீடம்" என்னும் நாடகம் நடைபெற்றது.

## இளையான்குடியில் தி.மு.க. அனுதாபிகள் கூட்டம்

13—12—54ல், இங்குள்ள தி. மு. கழக அனுதாபிகளின் சார்பில், திரு உ.செ. சிக்கந்தர் தலைமையில்நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் தோழர்கள் கே. எஸ். சந்தானம், விருதை ந. இராமசாமி ஆகியோர் கழகக் கொள்கைகள் பற்றிச் சொற்பொழிவாற்றிய பின் சென்னை சர்க்கார் கொண்டுவந்துள்ள புதிய நாடகச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தும், இளையான்குடி—சாலைநகர் முக்கிய சாலையை பராமரிப்பு செய்யும்படி பஞ்சாயத்துக் குழுவினரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## துறையூர் தி.மா.மு. கழகம்

15—12—54 இரவு 9 மணிக்கு, தோழர் அம்பில் தர்மலிங்கம் தலைமையில் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது:—செயலாளர்: மு. வரதராசன்; துணைச் செயலாளர்: இரா. சிந்தனைச் செல்வம்; பொருளாளர்: மு. எழினி; செயற்குழு உறுப்பினர்களாக எழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## காரிப்பட்டியில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

16—12—54ல், தோழர் கே. எஸ். சந்தானம் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: மு. தமிழ்ப்பித்தன்; துணைச் செயலாளர்: எம். எம். சாமி; பொருளாளர்: என். சுந்தரராசன்; மாவட்டப் பிரதிநிதி: டி. பூஞ்செழியன். செயற்குழு உறுப்பினர்கள்: பி. வி. வி. செல்லையா, எம். காதர் பாட்சா, எஸ். தங்கம், எஸ். வி. எ. கழுவன்பாறை, கே. பிச்சை, கா. மைதீன், எஸ். வி. புன்னக்கருப்பணன், எ. கருப்பணன்.

அன்று மாலை 7 மணிக்கு தோழர் தமிழ்ப்பித்தன் தலைமையில் நடைபெற்ற துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் எம். அய்யாசாமி கொடி யேற்றினர். தோழர்கள் டி. பூஞ்செழியன், கே. எஸ். சந்தானம், எம். அய்யாசாமி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

## தர்மபுரி தி. மு. க. (கிளை)

16—12—54ல் தோழர் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில் 'சமுதாயம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசியதும், 'செயற்குழு உறுப்பினர் கடமை' குறித்துத் தலைவர் சொற்பொழிவாற்றினர். பின்னர், துணைச் செயலாளர் சண்முகம் தந்தையார் மாரிமுத்துவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

## சென்னை-சைதாப்பேட்டை தி. மு. கழகம்

16—12—54ல் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், பொதுச் செயலாளர் அவர்களின் மைத்துனர் திரு. அரங்காநாதன், சைதை மூர்த்தியின் குழந்தை ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. பின்னர், தோழர் கண்ணதாசன் அவர்கள் நடத்திக் கொடுக்க இருக்கும், 'காலட்சேபத்தை' ஜனவரி முதல் வாரத்தில் வைத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

## உறந்தை தி. மு. க. (கிளை)

16—12—54 இரவு 9 மணியளவில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், அனுதாபத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டபின், சென்னை நாடக சட்டத்திருந்த மசோதாவை கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், 20—11—54 முடிய கழக வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, புதிய நிர்வாகிகளிடம் தரப்பட்டது.

## பம்பாய்—பாண்டுப் தி. மு. கழகம்

16—12—54 பகல் 1 மணிக்கு, தோழர் வி. தேவதாஸ் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தின்போது, தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள் கழகத்தை நடத்திச் செல்லவேண்டிய முறையைப் பற்றியும், நிர்வாகிகளின் நாணயத்தைப் பற்றியும், பப்பாயில் தி. மு. கழகத்தின் பணி என்ன என்பது பற்றியும், சென்ற ஆண்டில் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின் போது தூத்துக்குடியில் நடந்த சம்பவங்கள் பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

## சேந்தன்குடியில் தி. மு. கழகம் அமைப்பு

17—12—54 இரவு 8 மணிக்கு பனங்குளம் தோழர் ம. ரா. மணிமொழி தலைமையில், இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்று, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர் : இரா. குழந்தைவேல்; துணைச்செயலாளர் : கே. எஸ். துரைசாமி; பொருளாளர் : நீ நடேசன் ; மாவட்டப் பிரதிநிதி : பி. கே. செல்லையா மற்றும் 10 - பேர் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## கொமரலிங்கம் தி. மு. க.

18—12—54ல், தோழர் வி. மாரியப்பன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: சு. நவனீதம் ; துணைச் செயலாளர் : கே. நாராயணசாமி ; பொருளாளர் : எ. வஹாப்; மாவட்டப் பிரதிநிதி: வே. வீரப்பன் ; செயற்குழு உறுப்பினர்கள் : நந்தகோபால், முகமது. கனி, தங்கம், நாகப்பன், அனீபா, வடிவேல், வி. மாரியப்பன்.

## வைத்தீஸ்வரன்கோயில் தி. மு கழகம்

13—12—54-ல் நடந்த செயற்குழுக் கூட்டத்தில், 1955-ம் ஆண்டிற்கு தோழர்கள் த. ராமசாமி செயலாளராகவும், முருகையன் துணைச்செயலாளராகவும், அ. வி. முத்துகிருட்டிணன் பொருளாளராகவும், எ. ம. துரை மாவட்டப் பிரதிநிதியாகவும், வை. உத்திராபதி, வி. லட்சுமணன், மு. சம்பந்தம், பிச்சமுத்து, கிருஷ்ணமூர்த்தி, இரா. கோவிந்தராசன், பாலகிருஷ்ணன், பூராசாமி, கன்னையன் ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், சென்னை நாடக மசோதாவைக் கண்டித்தும், திராவிடர் திருநாளைக் கொண்டாடுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தூத்துக்குடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

19—12—54-ல், வ. உ. சி. திடலில், தோழர் கே. ஆர். இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கே. வி. கே. சாமி, அலிசேக் மன்சூர், மதுரை எஸ். முத்து ஆகியோர் சென்னை சர்க்காரின் புதிய நாடக சட்டத்தைக் கண்டித்துப் பேசினர். பின்னர், நாடகத் தடை மசோதாவைக் கண்டித்தும், சமீபத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் திராவிடத் தொழிற் சங்கம் ஒரு போட்டிச் சங்கமாக அமையாமல் திராவிடத் தொழிலாளர்கள் நலங் கருதிச் செயலாற்ற வேண்டுமென கேட்டுக்கொண்டும், இந்நகரில் வீட்டுச் சொந்தக்காரர்களில் பலர், வீடுகளைப் பழுதுபார்க்காமலும், வெள்ளையடிக்காமலும் சுகாதாரக் கெடுதல் செய்துவருவதால், அத்தகைய வீடுகளை நகரசபையினரே பழுதுபார்த்து வெள்ளையடித்தும், அதற்கான செலவுகளைத் தீர்வை வசூல் செய்யும்பொழுது சேர்த்து வசூல் செய்யும்படி நகரசபையினரைக் கோரியும், இந்நகரில் முன்னால் ரத்து செய்யப்பட்டிருந்த தலைச்சுமை வரி மீண்டும் இப்போது வசூல் செய்யப்படுவதை நிறுத்திவிடுமாறு நகரசபையைக் கேட்டுக்கொண்டும், இந்நகர் புது மார்க்கெட்டுக்குப் பின்பகுதியில், கடந்த 30 ஆண்டு காலமாக 'லைசென்ஸ்' பெற்று சவரத் தொழில் செய்துவந்து, இப்போது அவ்விடத்தை விட்டு வெளியேற்றப்பட்டுள்ள தொழிலாளர்கள், மீண்டும் அவ்விடத்திலேயே தங்கள் தொழில்களை நடத்த ஆவன வசதி செய்யும்படி நகர மன்றத்தைக் கோரியும், நகரில் குடி தண்ணீர் கஷ்டம் அதிகமாயிருக்கின்ற போது, தனிப்பட்ட நபர்கள் வீட்டிற்கு மட்டும் தண்ணீர்க் குழாய் அனுமதிக்க முயற்சி செய்வதைக் கண்டிப்பதுடன், இத்தகைய செய்கையை உடனடியாகக் கைவிடும்படி நகர சபையினரைக் கேட்டுக் கொண்டும், மேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## கூத்தூர்-திருச்சிமாவட்டம் தி. மு. கழகத் துவக்கம்

19—12—54ல், இவ்வூரில் தி. மு. கழகம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர் : து. பெரியசாமி; துணைச் செயலாளர் : க. நடேசன்; பொருளாளர் : ச. பொன்னு.

## கரூர் (19-வது வட்டம்) தி. மு. கழகம்

19—12—54 மாலை 5 மணிக்கு, கருணாநிதி நாடக மன்றத்தில் நடைபெற்ற கழகச் செயற் குழு கூட்டத்தில், புதிய நாடக சட்டத்தை எதிர்த்தும், மதுரை, திருச்சி, கரூர் முதலிய இடங்களில் தடை விதித்திருப்பதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் பொங்கல் விழாவை சிறப்பாக நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## திருச்சி—பாலக்கரை எடத்தெரு தி. மு. க. கிளை

19—12—54ல் தோழர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் கழகத் தோழர் எம். ஆர். ஆர். சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த பின்னர், புதிய நாடக சட்ட மசோதாவைக் கண்டித்தும், பொங்கல் விழாவை சிறப்பாக நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## சேந்தமங்கலம் தி. மு. க. (கிளை) துவக்க விழா

19—12—54 மாலை 5 மணிக்கு, தோழர் இளங்கோவன் தலைமையில், தோழர் எஸ். நெடுமாறன் மேற்படி கழகத்தைத் திறந்து வைத்தார். தோழர் கிருஷ்ணசாமி கழகக் கொடியேற்றினர். அன்று மாலை 7 மணிக்கு, பெருமாள் கோவில் முன்னிலையில், தோழர் கே. எம். பழனிமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் எஸ். நெடுமாறன் கழகக் கொள்கைகள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். பின்னர், நாடக மசோதாவைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வளவனூரில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

19—12—54 மாலை 6 மணிக்கு இவ்வூர் பழைய சினிமா திடலில் தோழர் வ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் தில்லைவில்லாளன் சொற்பொழிவாற்றிய பின், புதிய நாடக சட்டத்தைக் கண்டித்தும், கடைச் சிப்பந்திகள் சட்டப்படி, தற்போது கொண்டு வந்துள்ள விதிவிலக்கை ரத்து செய்து முன்பிருந்தது போலவே இருக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அயோத்தியாபட்டணம்—மேட்டுப்பட்டி தி. மு. க.

19—12—54 மாலை 4½ மணியளவுக்கு தோழர் மு. இராமசாமி இல்லத்தில் நடைபெற்ற சேலம் வட்ட தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டத்தில், மஞ்சவாடி, அயோத்தியாபட்டணம், நீர்முள்ளிக் குட்டை, அமானிகொண்டாலம்பட்டி ஆகிய இடங்களில் ஜனவரி இறுதியில் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களைக் கொண்டு பொதுக் கூட்டங்கள் நடத்துவதெனவும், புதிய நாடக சட்டத்தைக் கண்டித்தும், அயோத்தியாபட்டணத்தில் கழகப் பிரசார நாடகம் ஒன்று நடத்துவதெனவும், அதை நடத்துவதற்கான முழு பொறுப்பையும் தோழர் மாணிக்கம் அவர்களிடம் ஒப்புவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஆமதாபாத்-ஜமால்பூர் தி. மு. கழகம்

தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், இளமைப்பித்தன் இருவரும் 19—12—54 காலை 6 மணிக்கு ஆமதாபாத் வந்தடைந்தனர். அவர்களை கழகத் தோழர்கள் இரயில் நிலையத்தில் வரவேற்றனர். பின்னர், 10 மணிக்கு பான்கோர்நாகா கதர் ஸ்டோர் மேல்மாடியில் ஊழியர் கூட்டம் நடந்தது. தோழர் தங்கப்பழம் சொற்பொழிவாற்றினர்.

பிற்பகல் 4 மணிக்கு, காங்கியா நகிஞவாடி திறந்தவெளி அரங்கில் கழகச் சார்பில், தோழர் ஆர். பி. சுந்திரம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் தங்கப்பழம் 'கம்யூனிஸ்டுகளும் நாமும்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்.

## புதுவை தி. மு. கழகம்

19—12—54 மாலை 5 மணிக்கு நடைபெற்ற கழக உறுப்பினர்களின் பொதுக் கூட்டத்தில் சென்னை நாடகத் தடை சட்டத்தைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## எழுமலை தி. மு. கழகம்

19—12—54ல், இவ்வூர் கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் சினிமா கொட்டகையில் தோழர் கோபால் தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டபின், மதுரை மாநாட்டிற்கு தொண்டர்படை உறுப்பினராக தோழர் சே. ஆனந்தகிருஷ்ணனையும், பிரதிநிதிகளாகத் தோழர்கள் கோபால், கு. பரமசிவன் ஆகியோரையும் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர், நடிப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தாயார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

## திருச்செங்கோடு தி. மு. க.

19—12—54 காலை 10 மணிக்கு தோழர் ம. சி. சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், பொதுக் கூட்ட வரவு—செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், நாடக மசோதாவைக் கண்டித்தும், தோழர் ப. இராமசாமி விலகுதல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், தோழர் என். கே. பி. வேல், கழக உறுப்பினர்கள் நடக்கவேண்டிய ஒழுங்கு முறைகள்பற்றி பேசினர்.

## வாழவந்தி தி. மு. கிளைக் கழகத் திறப்பு

20—12—54ல் இவ்வூரில் கழகக் கட்டிடத்தை தோழர் என். பி. செல்லப்பன் திறந்து வைத்தார்; தோழர். எஸ். நெடுமாறன் கழகக் கொடியேற்றினர். அன்று மாலை 5 மணிக்கு தோழர் என். பி. செல்லப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் எஸ். நெடுமாறன் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். பின்னர், இவ்வூரிலுள்ள சேலம் மாவட்ட மன்றப் பள்ளியில், சாதி பாகுபாடு காரணமாக தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அவமதிக்கப்படுவதைக் கண்டித்தும், இதுபற்றி மாவட்டக் கழகத்தார் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— பொறுப்பாளர்: முத்துசாமி; செயலாளர்: வீ. தங்கவேலன்; துணைச் செயலாளர்: ப. பழனிச்சாமி; பொருளாளர்: கருப்பண்ணன்; மாவட்டப் பிரதிநிதி: வி. என். ரங்கசாமி; விளம்பர உறுப்பினர்கள்: மாணிக்கம், நடேசன்.

## நெல்லை — அம்மன்புரம் தி. மு. கழகக் (கிளை)

2—9—54ல் செய்யப்பட்ட தீர்மானத்திற்கொப்ப அம்மன்புரம் (நெல்லை மாவட்டம்) முப்பிடாரி அம்மன் கோவிலுக்கு வரிப் பணம் தருவதில்லை என்று முடிவு செய்ததால் அதனை ஊரார் ஒப்புக் கொள்ளாமல், கழகச் செயலாளர் தோழர் மா. கணபதியை ஊரை விட்டு விலக்கி வைத்தனர். பிறகு 20—12—54ல் ஊராரை ஒன்று திரட்டி சமாதானப்படுத்தி, கழகத்தினர், கோவிலுக்கு வரி கொடுக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

## திருப்பூர் நகர தி. மு. க.

22—12—54ல் நகர தி. மு. கழகம், 13, 14-வது வார்டு கிளைக் கழகங்கள், மாணவர் தி. மு. கழகம், தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பகம், வள்ளுவர் படிப்பகம், அறிவொளி நாடக மன்றம், இளைஞர் நடிகர் மன்றம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றுகக் கூட்டுச் சேர்ந்து பொங்கல் விழாவை சிறப்புற நடத்துவதென முடிவு செய்து அதற்கான நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: கே. பழனிச்சாமி; பொருளாளர்: மெ. நா. அண்ணாமலை ; விளம்பர உறுப்பினர்: இரா. பாலசுந்திரம், தி. ப. சுப்பிரமணியம்.

REGD. No. 6311

# சீனுவில் கைதிகளாயிருக்கும் அமெரிக்க விமானிகள்

## பிரச்சினையை வேண்டுமென்றே அமெரிக்கா பெரிதாக்குகிறது

சீனப் பிரதமரின் குற்றச்சாட்டு

சீனுவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் 13 அமெரிக்க விமானிகள் பற்றி வேண்டுமென்றே அமெரிக்கா பரபரப்பு உண்டுபண்ணி வருவதாக சீனப் பிரதமர் சௌ-என்-லாய் தெரிவித்திருக்கிறார்.

“அமெரிக்கா ஒரு புதிய யுத்தத்திற்குத் தயாராகி வருகிறது. உலகத்தில் பிளவையும், துவேஷத்தையும் ஆழமாக்க அமெரிக்கா முயற்சி செய்து வருகிறது; சியாங்கே-ஷேக்குடன் அமெரிக்கா செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மறைக்கவே இந்த விமானிகள் பற்றிய சம்பவத்தைப் பெரிதாக்கி வருகிறது,”

என்று, சௌ-என்-லாய் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

சீன அரசியல் ஆலோசகர் மாநாட்டின் 2-வது தேசீயக் குழுவில் டிசம்பர் 21-ந் தேதி ஒரு அறிக்கை வெளியிடுகையில் சௌ-என்-லாய் மேற்கண்டவாறு தெரிவித்தாராம்.

## பத்து லட்சம் ரூபாய் பெறுமான தங்கம்

போலீசார் கைப்பற்றினர்

பூனு, டிச. 26—

தானு மாவட்டத்தில் உள்ள தானு அருகிலிருக்கும் அம்பர்கான் என்ற இடத்தில், ரூ. 10 லட்சம் பெறுமான பத்தாயிரம் தோலா தங்கம் ‘பிரசாத்’ என்ற ஒரு நாட்டுப் படகிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

பாரசீகத்திலிருந்து கடத்தப்பட்ட சரக்கு அது என்று கருதப்படுகிறது. அப்படகில் இன்னும் தங்கம் இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுவதால், விசேஷ போலீஸ் பாதுகாப்புப் படையுடன் மேலும் சோதனை நடைபெறுகிறதாம்.

## நடனமாடினர்!

சிம்லா, டிச. 25—

யூகோஸ்லேவிய குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ சிம்லாவுக்கு கிறிஸ்துமஸ் விழா கொண்டாட வந்துள்ளார்.

அங்கு அவருக்கு மலைவாசிகளால் பிரமாண்டமானதொரு வரவேற்புத் தரப்பட்டது.

மலைவாசிகள் ஒரு கிராமிய நடன நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்த நிகழ்ச்சியில் டிட்டோவும் பங்கு பெற்று, அவரும், நடனமாடியவர்களுடன் சேர்ந்து கைகோர்த்துக் கொண்டு நடனமாடி மகிழ்ந்திருக்கிறார் எனத் தெரிகிறது.

சிம்லாவிலிருந்து 18 மைல் தொலைவில் உள்ள தியோக் எனும் கிராமத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாம்.

## குடிசைத் தொழில்கள்

### அபிவிருத்திசெய்ய சென்னை சர்க்கார் முடிவு?

சென்னை மாநிலத்தில், சர்க்கார் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்ற எண்ணெய் ஆட்டும் தொழில், மண்பாண்டங்கள், தோல் சாமான்கள் தயாரித்தல், சோப்பு, நார் தயாரித்தல், கதர் தொழில் போன்ற குடிசைத் தொழில்களடங்கிய பட்டியல் ஒன்றை, சென்னை சர்க்கார், திட்டக் குழுவுக்கு வெகுவிரைவில் அனுப்பிவைக்குமென்றும், இத் தொழில்கள் அபிவிருத்திக்கான திட்டங்கள் யாவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறுமெனவும் கூறப்படுகிறது.

## விவசாயிகளுக்கு கடன் வசதி

மேலும் ரூ. 24 லட்சம் நிதி உதவி?

சென்னை—

சென்னை மாநில விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிப்பதற்காக மேலும் ரூ. 24 லட்சம் தருவதாக மத்திய சர்க்கார், சென்னை சர்க்காருக்கு அறிவித்துள்ளதாம். இந்தக் கடன் தொகைகளை எல்லாம் எப்படி விவசாயிகட்கு வினியோகிப்பது என்பதுபற்றி சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரைக் கலந்தாலோசித்து வருகிறது.

கால்நடைகள் வாங்குவது, பால் பண்ணை குடிசைகள் அமைப்பது போன்றவைகளுக்கு இக்கடன் உதவி செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

## கர்த்தரின் பிறந்த நாள் கொண்டாட்டம்

273 அமெரிக்கரைப் பலி கொண்டது!

நியூயார்க், டிச. 26—

கிறிஸ்துமஸ் தினக் கொண்டாட்டத்தன்று ஏற்பட்ட விபத்துக்களில் இன்று காலை 7 மணி வரை சுமார் 273 பேர் மாண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 211 பேர் சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களிலும், இதர தீ போன்ற விபத்துக்களிலும் அகப்பட்டு மாண்டனராம்.

வழக்கமாக இந்த தினத்தில் 320 பேர் மரணம் தழுவுவார்களாம்.

# மதுரை மாநாடுகள்

“8, 9—1—1955 நாட்களில், மதுரை-ஆரப்பாளையம், ஞான ஒளிவுபுரத்தில் அமைத்துள்ள சௌந்திரபாண்டியனார் பந்தலில், மதுரை மாவட்ட தி.மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் நடைபெறும். மாநாட்டு வேலைகள் துரிதமாக நடந்துவருகிறது.

மாநாட்டுப் பந்தல் நீளம் 375 அடி; அகலம் 250 அடி; சாப்பாட்டுப் பந்தல் நீளம் 200 அடி; அகலம் 200 அடி பரப்பில் அமைத்து வருகிறார்கள்.

மாநாட்டுப் பந்தலின் முகப்பு அழகான முறையில் அமைக்க வேலைகள் துவக்கப்பட்டு விட்டது.

உள்ளூர் கிளைக் கழகத் தோழர்களெல்லாம் மாநில மாநாட்டைப் போல் நடத்த இரவு பகலாக உழைத்து வருகிறார்கள்.

ஓவிய நண்பர்கள் பல புதுமையான சித்திரங்களையும், பொன்மொழிகளையும் தீட்டி வருகிறார்கள்.

மாநாடுகளில் நடத்துவதற்கு நடிகர்கள் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களும் புதிய நாடகங்களை உருவாக்கி வருகிறார்கள்.

மாநாட்டிற்கு குடும்பத்துடன் வருவதாகவும், வசதி கோரியும் பல வெளியூர் தோழர்களிடமிருந்து கடிதங்கள் வந்த வண்ணமிருக்கின்றன. அதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டு வருகிறது; தாய்மார்கள், குழந்தைகளுக்கு பிரத்தியேக வசதிகள் செய்யப்பட்டு வருகிறது,”

என்று, மாநாட்டுச் செயலாளர் மதுரை தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

## திருச்சியில் அண்ணு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள், 22—12—54 புதனன்று லெப்பைக்குடிக்காடு தி. மு. கழக ஆண்டு விழாவை நடத்திக்கொடுத்துவிட்டு, இரவு அங்கிருந்து தோழர்கள் பொன்னம்பலனுர், மதியழகன், தர்மலிங்கம் ஆகியோருடன் திருச்சி வந்து சேர்ந்தார்கள்.

23—12—54 அன்று திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம், துணைச் செயலாளர் ஜி. பராங்குசம், நகர கழகச் செயலாளர் எம். எஸ். மணி மற்றும் கழக முக்கியஸ்தர்களுடன், மாநில மாநாடு பற்றியும், கழக அலுவல்கள் பற்றியும் கலந்து பேசிவிட்டு, மாலை லால்குடி தி. மு. கழக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு, 24—12—54 அன்று திருச்சி மத்திய சிறையிலிருக்கும் தோழர் எம். ஆர். இராதா அவர்களைக் கண்டுபேசிவிட்டு, பகல் 4 மணியளவில் சின்னளப்பட்டி தி. மு. கழகக் கூட்டத்திற்கு திருச்சியைவிட்டுப் புறப்பட்டார்கள்.

# தோல்வியும் ஏமாற்றமும் பாகிஸ்தானைச் சூழ்ந்துள்ளன!

## ஜின்னுவின் பிறந்த நாள் விழாவில் கவர்னர்-ஜெனரலின் சோக கீதம்!

கராச்சி, டிச. 25—

“பாகிஸ்தானை இப்பொழுது தோல்வியும், ஏமாற்றமும் சூழ்ந்து கொண்டிருக்கிறது,”

என்று, பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது ஜின்னுவின் பிறந்த நாள் விழாவின் போது பேசுகையில் கூறினர்.

“நம்முடைய தேசீயப் பிரச்சினைகளில் உள்ள சிக்கல்கள், நமது வாழ்வின்மீது சூழ்ந்திருக்கும் தோல்வியும், ஏமாற்ற மனப்பான்மையும், தனி மனிதன் வாழ்வுக்கும், கூட்டு வாழ்க்கைக்கும் சரியான முறையில் வழி காட்டப்படாததும், நமது எண்ணத்தில் உள்ள நிரந்தரமற்ற தன்மையுமே இதற்குப்பெரிதும் காரணமாகும்,”

என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

“நாட்டின் நன்மையை விட தங்கள் சொந்த நலனைப் பெரிதெனக் கருதுவோர், நாட்டின் எந்த விதமான உயர்ந்த லட்சியத்தையும் கடைப்பிடிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது; அவர்கள், அறிவுக் குழப்பத்திற்கும், மாகாணப் பித்து, பிரதேச விரோதம் ஆகியவைகளுக்காக வித்தூன்றுகிறார்கள்” என்று அவர் மேலும் கூறினர்.

“நாட்டின் அரசியலைத் தயாரிப்பது மிகவும் புனிதமான காரியமாகும்; ஆனால், சமீபத்தில், இப்புனிதமான காரியத்தில் கையாண்ட முறை கண்டிக்கத்தக்கதாகும்.

நாட்டின் அரசியல், சமூக, வாழ்க்கையைக் கவ்விக்கொண்டிருக்கும் தவருன போக்கையும், குழப்ப நிலையையும் இது எதிரொலிக்கிறது.

“அரசியலைத் தயாரிக்கும் வலிமை பெற்றவர்கள், மாகாணப் பித்து, சுயநலம் போன்ற தீய நோக்கினுல் பீடிக்கப்பட்டுள்ளனர்; இதன் மூலம் அவர்கள் நாட்டின் நன்மையை அவர்கள் மறந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் நடத்தையின் மூலம் நாட்டின் ஒற்றுமை பாழாகுமாறு செய்யுமளவுக்குச் சென்றுவிட்டனர்,” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தேர்தலில் தோற்றதின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவிற்கு வந்திருந்த பெண்களை மாணவர்கள் சிலர் துன்புறுத்தினர்கள் என்றும், பெண்களைப் போலீஸ் வானில் ஏற்றி பத்திரமாக அனுப்புமாறு நேரிட்டது என்றும் தெரிகிறது.

கல்லூரித் தேர்தல்களில் தோற்றுப்போன மாணவர்கள் தான் இதுபோன்ற இழிசெயல்களைப் புரிந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

# நேபாள சர்க்கார் தோல்வி

## தனி நபர் தீர்மானம் நிறைவேறியது

“நேபாள சர்க்கார் செய்யும் சட்டங்கள் அனைத்தும் ஆலோசனைக் குழுவின் அனுமதி பெற்ற பின்னர்தான் நாட்டில் சட்டமாக வேண்டும்,” என்று, தனி நபர் கொண்டுவந்த தீர்மானம் ஒன்று நேபாள ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நிறைவேறியது.

இத்தீர்மானத்தை, நேபாளப் பிரதமர் எதிர்த்தும், தீர்மானம் 10 வாக்குகள் அதிகம் பெற்று நிறைவேறியது.

இப்போதுள்ள அரசியல் அமைப்புப்படி, ‘ஆலோசனைக் குழுவின் கூட்டம் நடைபெருத போது, அமைச்சர்களுடன் கலந்து மன்னர் சட்டம் செய்யலாம்,’ என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இது, சர்க்காரின் தோல்வி என்ருலும், நேபாள மந்திரி சபை இராஜினுமா செய்வது அவசியமில்லையாம்.

நேபாள ஆலோசனைக் குழு நியமனம் செய்யப்பட்ட குழுவாகும்; பதவியில் உள்ள மந்திரி சபையை நீக்க அதற்கு அதிகாரம் இல்லை.

# கசபிளாங்காவில்பயங்கரவாதிகளின் தாக்குதல்

## 5 பேர் மரணம்; 11 பேருக்கு காயம்

கசபிளாங்கா, டிச. 26—

பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி 5 பேர் மரணம் அடைந்தனர் என்றும், 11 பேர் காயமடைந்தனர் என்றும் போலீசார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

பள்ளி ஆசிரியையான பிரெஞ்சு மாது ஒருவர் வெடிகுண்டு தாக்குதலில் மாண்டுபோனுர்.

பாங்கி ஒன்றின் எதிரே நின்றிருந்த சட்டத்தின்மீது பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளை வீசினர்களாம்.

இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலில் இரண்டு அரேபியர்கள் கொல்லப்பட்டனர்.

கசபிளாங்கா நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராக உள்ள ஒரு அல்ஜீரியக் குடிமகன் ஒருவர் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

கார் ஒன்றில் அமர்ந்துகொண்டு பயங்கரவாதிகள் திறந்திருந்த உணவு விடுதி ஒன்றின்மீது யந்திரத் துப்பாக்கியினுல் சுட்டனராம்

சைக்கிள் கிடங்கு ஒன்றையும், நிலக்கரி கிடங்கு ஒன்றையும் பயங்கரவாதிகள் தீயிட்டு அழித்தனர்: இதுபோல், பிரெஞ்சு அதிகாரியின் கார் ஒன்றும் நாசமாக்கப்பட்டதாம்.

## நேரு - முகமது அலி சந்திப்பு

எதிர்பாராது நிகழ்ந்தது

கல்கத்தா, டிச. 26—

பிரதமர் நேரு தம் குழுவினருடன் இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்தாவுக்கு விமான மூலம் புறப்பட்டார்.

பாகிஸ்தான், இலங்கை, பர்மா, இந்தோனேஷியா, இந்தியா ஆகிய கொழும்பு நாடுகளின் பிரதமர்கள், ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் நாமாட்டிற்கு ஏற்பாடுகள் செய்வதற்காகக் கூடிப் பேசுகின்றனர்.

டம் டம் விமான நிலையத்தில் தற்செயலாக, தாமதித்து வந்த பாக். பிரதமர் முகமது அலி பண்டித நேருவைச் சந்தித்திருக்கிருர்.

* * *

பாங்காங், டிச. 26—

இந்தியப் பிரதமர் பண்டித நேரு இன்று மாலை விமான மூலம் இங்கு வந்து சேர்ந்தார். அவருடன் அதே விமானத்தில் பர்மியப் பிரதமர் யூ-நூவும் வந்து சேர்ந்திருக்கிறார்.

இருவரையும் தாய்லாந்துப் பிரதமர் பிபுல் சொங்க்ராம் விமான நிலையத்தில் வரவேற்ருர் எனத் தெரிகிறது.

★

## காஷ்மீர் பிரச்னை: ஐ. நா.-வில் வருமா?

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, பண்டித நேருவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தாம் இப்போது காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா.-வில் எழுப்பப்போவதில்லை என்றும், பண்டித நேருவுடன் நேரடியாக அப்பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த விரும்புவதாயும் தெரிவித்துள்ளாராம்.

★

## பிரெஞ்சுப் பிரதமரைச் சந்திக்க....

பிரதமர் நேருவுக்கு அழைப்பு

அடுத்த ஆண்டு பிப்ரவரி துவக்கத்தில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதமர் நேருவை அவர் திரும்புகையில், பாரிசுக்கு வருகை தருமாறு பிரெஞ்சு சர்க்கார் அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஜனவரி 31-ல் துவங்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, இந்தியா திரும்புகையில் நேரு பாரிஸ்நகரில் 3 அல்லது 4 நாட்கள் தங்கி, பிரதமர் மெண்டே பிரான்சைச் சந்தித்து உரையாடுவார் என்று அறிய வருகிறது.

### திருக்குறள் வகுப்பு

28-12-54 பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண் ஜூர்ன இல்லத்தில், தாமரைக் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில்; ‘புறங் கூறாமை’ என்பது குறித்து தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் ஜே. சாரதாம்பாள் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.,